மாலை முரசு

பக்கங்கள் 18+ 03

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | பங்குனி 17 திங்கட்கிழமை 31.03.2025 | அதிர்வு 240

## துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் படுகாயம்



அம்பலாந்தோட்டை பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் படுகாய மடைந்துள்ளார். அம்பலாந் 02

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்

# யாழ். பல்கலை புதுமுக மாணவன் மீது சிரேஷ்ட மாணவர்கள் கொடூர தாக்குதல்

## காது கேட்கும் திறன் இழப்பு

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக விஞ்ஞான பீட புதுமுக மாணவன் மீது சிரேஷ்ட மாணவர்கள் தலைக்கவசத்தால் தாக்கி சித்திரவதை புரிந்தமையால் மாணவனின் காது கேட்கும் திறன் குறைவடைந்துள்ளது என்று பாதிக்கப்பட்ட மாணவனின் தந்தை தெரிவித்துள்ளார்.

மகன் மீதான தாக்குதல் சம்பவம் மற்றும் சித்திரவதை ஆகிய வற்றுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், மகனின் உயிருக்கு பாதுகாப்பு அளிக்குமாறும் தந்தை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுத் 02




# தையிட்டி திஸ்ஸ விகாரைக் காணியை போலியான உறுதிப்பத்திரங்களுடன் கையகப்படுத்தியுள்ள தமிழ் மக்கள்!

## இப்படிப் பொய்யுரைக்கின்றார் விமல்



“யாழ். தையிட்டி திஸ்ஸ விகாரைக்குச் சொந்தமான காணியை அந்தப் பிரதேச மக்கள் போலியான காணி உறுதிப்பத்திரங்களுடன் கையகப்படுத்தியுள்ளனர். மிகுதியாகியுள்ள காணிகளைச் சட்டவிரோதமான முறையில் கையகப்படுத்திக் கொள்வதற்குத் தொடர்ந்து போராட்டங்களில் விகாரையின் பூஜை வழிபாடுகளுக்கு இடையூறு விளைவிக்கின்றார்கள்.”

- இவ்வாறு தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள 02

# ஏ - 32 வீதியில் 96 கிலோ கஞ்சாவுடன் மூவர் கைது!

(த.சுபேசன்)

யாழ். சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சங்குப்பிட்டிப் பாலத்தை அண்மித்த ஏ - 32 வீதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இரவு 96 கிலோ கிராம் கஞ்சாவுடன் மூவர் கைது செய்யப்பட்டனர்.

இராணுவப் புலனாய்வுப் பிரிவுக்கு கிடைக்கப் பெற்ற இரகசியத் 02





உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்-Bonding Tamils Globally

# கடலில் அள்ளுண்டு சென்ற மூன்று பெண்கள் இருவர் வைத்தியசாலையில்; ஒருவர் மாயம்

முல்லைத்தீவு, நாயாற்றுக் கடலில் அள்ளுண்டு சென்ற மூன்று பெண்களில் இருவர் காப்பாற்றப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் ஒருவர் காணாமல்போயுள்ளார்.

இந்தச் சம்பவம் இன்று திங்கட்கிழமை இடம்பெற்றுள்ளது.

உடையார்கட்டு பகுதியில் தையல் பயிற்சி பெறும் யுவதிகளும், தையல் பயிற்சியாளர்களுமாக 15 பெண்கள் வாகனத்தில் நாயாற்று கடற்பகுதிக்குச் சென்றுள்ளனர்.

மேற்படி பெண்கள் நாயாற்றுக் கடலில் நீராடிக்கொண்டிருந்த போது அவர்களில் மூவர் திடீரென நீரில் அள்ளுண்டு சென்றுள்ளனர்.

நீரில் அள்ளுண்டு செல்லப்பட்ட மூவரில் இரு பெண்கள் மீட்கப்பட்டு மாஞ்சோலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் ஒரு பெண் காணாமல்போயுள்ளார்.

காணாமல்போன பெண்ணைத் தேடும் பணியில் கடற்படையினர் ஈடுபட்டுள்ளனர். 47, 21 வயதுடைய பெண்களே இவ்வாறு மீட்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

20வயதுடையபெண்ணேகாணாமல் போயுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## துப்பாக்கி..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொக்கல பகுதியில் இன்று அதிகாலை மோட்டார் சைக்கிளில் வருகை தந்திருந்த இருவர் அங்கிருந்த நபர் ஒருவர் மீது துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டுவிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

துப்பாக்கிப்பிரயோகத்துக்கு இலக்கான நபர் படுகாயமடைந்த நிலையில் அம்பாந்தோட்டை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

30 வயதுடைய அம்பாந்தோட்டை கொக்கல பகுதியைச் சேர்ந்த நபரே காயமடைந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்த நபர் மற்றும் பிறிதொரு தரப்பினருக்கிடையில் நீண்ட காலம் நிலவி வந்த முன்விரோதம் காரணமாக மேற்படி துப்பாக்கிச்சூடு மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று விசாரணையின் போது தெரிய வந்துள்ளது.

உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியைச் சந்தேகநபர்கள் குற்றச் செயலுக்காகப் பயன்படுத்தியுள்ளனர்.

மேலும் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் அவர்களைக் கைது செய்வதற்கான மேலதிக விசாரணைகளை அம்பலாந்தோட்டை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## தையிட்டி..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேசிய சுதந்திர முன்னணியின் காரியாலயத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப் பின்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

"தையிட்டி விகாரையில் கடந்த வாரம் விசேட பூஜை வழிபாடுகள் நடைபெற்றபோது ஒரு தரப்பினர் எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்கள். இதனைத் தொடர்ந்து அங்கு பாதுகாப்புக்காக அமர்த்தப்பட்டிருந்த இராணுவத்தினர் அவ்விடத்தில் இருந்து வெளியேறியுள்ளார்கள். இதற்கான கட்டளையை இராணுவத் தளபதி பிறப்பித்துள்ளார்.

இந்த முறையற்ற செயற்பாடுக்கு அதிருப்தி வெளிப்படுத்தி மல்வத்து பீடம் ஜனாதிபதிக்குக் கடிதம் அனுப்பி வைத்துள்ளது. பிற மதத்தைச் சார்ந்த இராணுவத் தளபதி இந்த விடயத்தில் பொறுப்புடன் செயற்பட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

புத்தசாசனம் மற்றும் கலை கலாச்சார அமைச்சில் பிரதான உயர் பதவிகளை வகிக்கும் இருவர் பௌத்த மதத்தைச் சார்ந்தவர்களல்லர். முஸ்லிம் மத விவகார திணைக்களத்துக்கோ, இந்து மத விவகார திணைக்களத்துக்கோ அந்த மதத்தைச் சாராத பிற மதத்தை சார்ந்தவர்களை உயர் பதவிக்கு நியமித்தால் அவர்கள் ஏற்றுக்கொள்வார்களா?

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள தொல்பொருள் இடங்களைப் பௌத்தம் மற்றும் இந்து என்று மத அடிப்படையில் அடையாளப்படுத்த வேண்டாம் என்று தொல்பொருள் திணைக்களத்துக்கு அரசு அறிவித்துள்ளது. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இந்து மத தொல்பொருள் சின்னங்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை. பௌத்த மத தொல்பொருள் சின்னங்கள்தான் திட்டமிட்ட வகையில் அழிக்கப்படுகின்றன.

பௌத்த மதத்தைப் பாதுகாக்க வேண்டியது அத்தியாவசியம் என்று அரசமைப்பில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆகவே, ஆட்சியாளர்கள் அதற்கமைய செயற்பட வேண்டும்." – என்றார்.

## ஏ - 32 வீதியில் ..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தகவலின் அடிப்படையில் விசேட அதிரடிப் படையின் உதவியுடன் மேற்படி கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது வான் ஒன்றில் 45 கஞ்சா பொதிகளை எடுத்துச் சென்ற வவுனியா பகுதியைச் சேர்ந்த மூன்று சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டு சாவகச்சேரிப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைச் சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## யாழ். பல்கலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைவரிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

நாத்தாண்டியா பகுதியைச் சேர்ந்த மாணவனே பாதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

கடந்த 27 ஆம் திகதி வியாழக்கிழமை பல்கலைக்கழக விடுதியில் இருந்து பல்கலைக்கழகத்துக்கு நடந்து வந்து கொண்டிருந்த புதுமுக மாணவனை விரிவுரைக்குச் செல்லவிடாமல் தடுத்த சிரேஷ்ட மாணவர்கள் சிலர், அவரை வலுக்கட்டாயமாக மோட்டார் சைக்கிளில் ஏற்றி, தனியார் மாணவ விடுதி ஒன்றுக்கு அழைத்துச் சென்றுள்ளனர்.

அங்கு வைத்து அம்மாணவனையும் வேறு சில புதுமுக மாணவர்களையும் கடுமையான சித்திரவதைகளுக்குள்ளாக்கிய சிரேஷ்ட மாணவர்கள், தலைக்கவசத்தாலும் தாக்கியுள்ளனர்.

தாக்குதல் காரணமாக மயக்கமடைந்த மாணவனுக்குக் கட்டாயப்படுத்தி பனடோல் பருக்கிய பின்னர், தனியார் விடுதியிலிருந்து துரத்தி விட்ட பின்னர், கூகிள் வரைபட உதவியுடன் பல்கலைக்கழக விடுதிக்குச் சென்று அங்கிருந்து அம்புலன்ஸ் மூலமாக வைத்தியசாலைக்குச் சென்று சிகிச்சை பெற்றுள்ளார்.

தாக்குதல் மற்றும் சித்திரவதைக்குள்ளான நாத்தாண்டிய பகுதியைச் சேர்ந்த மாணவன் ஒரு காது கேட்கும் திறனை இழந்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

சம்பவம் தொடர்பாக நீதியானதும், சுதந்திரமானதுமான விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும், உடலளவிலும், உள ரீதியாகவும் பாதிக்கப்பட்ட தனது மகனுக்குப் பாதுகாப்பளிக்குமாறு கோரியுள்ள தந்தை, பொலிஸ் மற்றும் மனித உரிமைகள் ஆணைக்குழு விசாரணைகளும் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று கோரியுள்ளார்.

# நாம் அனைவரும் ஒற்றுமையுடனும் நல்லிணக்கத்துடனும் வாழவேண்டும்

## நோன்புப் பெருநாள் வாழ்த்துச் செய்தியில் வடக்கு ஆளுநர் தெரிவிப்பு

புனித ரமழான் மாதத்தின் நிறைவைக் குறிக்கும் நோன்புப் பெருநாளை உற்சாகத்துடன் கொண்டாடும் இந்நாளில், வடக்கு மாகாண மக்களுக்கும், குறிப்பாக இஸ்லாமிய சகோதர, சகோதரிகளுக்கும் என் மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன் என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,




“ரமழான் மாதம் முழுவதும் நீங்கள் கடைப்பிடித்த நோன்பும், பக்தியும், இரக்கமும், சமூக ஒற்றுமையையும் விளக்குகின்றது.

இத்தகைய நேரம் பகிர்ந்தளிக்கவும், ஒருவருக்கொருவர் ஆதரவளிக்கவும், சமூக ஒற்றுமையை வலுப்படுத்தவும் ஓர் அரிய சந்தர்ப்பமாக அமைகின்றது.

நாம் அனைவரும் மகிழ்ச்சி, அமைதி, சகோதரத்துவம், மனிதாபிமானம் ஆகியவற்றைப் பேணிச் செலுத்தி, ஒற்றுமையுடனும் நல்லிணக்கத்துடனும் வாழவேண்டும்.

இந்தப் புனித நாளில் உங்கள் குடும்பங்களுக்குத் துன்பங்கள் நீங்கி, வாழ்வில் மகிழ்ச்சி, செழிப்பு, அமைதி நிலவிக் கண்டிட என் இருகரம் கூப்பி வாழ்த்துகின்றேன். உங்கள் அனைவருக்கும் இனிய நோன்புப்பெருநாள் நல்வாழ்த்துக்கள்.” – என்றுள்ளது.

## ஓட்டோ வீதியில் குடைசாய்ந்ததில்

# ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இருவர் பலி; இருவர் காயம்

கண்டி – பேராதனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட எதடுவாவ பிரதேசத்தில் இடம்பெற்ற விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளதுடன் மேலும் இருவர் படுகாயமடைந்துள்ளனர் என்று பேராதனை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து இன்று திங்கட்கிழமை அதிகாலை இடம்பெற்றுள்ளது.

ஓட்டோ ஒன்று வீதியில் குடைசாய்ந்ததில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் ஓட்டோ பயணித்த இருவர் உயிரிழந்துள்ளதுடன் மேலும் இருவர் படுகாயமடைந்த நிலையில் பேராதனை போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பேராதனை பிரதேசத்தில் வசிக்கும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் பயணித்த ஓட்டோவே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பேராதனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# தந்தை செல்வாவுக்குச் சுமந்திரன் அஞ்சலி





இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஸ்தாபகத் தலைவர் சாமுவேல் ஜேம்ஸ் வேலுப்பிள்ளை செல்வநாயகத்தின் 127ஆவது ஜனன தினமான இன்று, தமிழரசுக் கட்சியின் பதில் பொதுச்செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன், யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள தந்தை செல்வா நினைவிடத்தில் அஞ்சலிகளைச் செலுத்தினார்.

# காலிமுகத்திடலில் நோன்புப் பெருநாள் தொழுகை








நோன்புப் பெருநாளை முன்னிட்டு இலங்கை மேமன் சங்கத்தின் ஏற்பாட்டில் கொழும்பு - காலிமுகத்திடலில் இன்று காலை மௌலவி குலாம் மொஹமட் அம்ஜாட் தலைமையில் நடைபெற்ற தொழுகையின்போது....



# குளியாப்பிட்டியில் விபத்து; கணவன், மனைவி மரணம்!

குருணாகல், குளியாப்பிட்டி – ஹெட்டிபொல வீதியில் கடவலகெதர பகுதியில் இடம்பெற்ற விபத்தில் கணவன் மற்றும் மனைவி உயிரிழந்துள்ளனர்.

வாகனம் ஒன்று குளியாப்பிட்டியிலிருந்து ஹெட்டிபொல நோக்கிப் பயணித்தமோட்டார்சைக்கிளுடன்மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இந்த விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த கணவனும் மனைவியும் படுகாயமடைந்த நிலையில் குளியாப்பிட்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் இருவரும் உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

64 வயதுடைய கணவனும் 57 வயதுடைய மனைவியுமே உயிரிழந்துள்ளனர்.

விபத்தை ஏற்படுத்திய வாகனம் பிரதேசத்தைவிட்டு தப்பிச் சென்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை குளியாப்பிட்டி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# புதிய சட்டச் சிக்கல்!

உயர் நீதிமன்றத்தினால் பணி இடை நிறுத்தம் செய்யப்பட்டுள்ள பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனை அப்பதவியிலிருந்து அகற்றுவதற்கான நடவடிக்கைகளை தொடங்கும் விதத்தில் நாடாளுமன்றத்தின் ஒரு தொகை உறுப்பினர்கள் ஒப்பமிட்டு சமர்ப்பித்துள்ள பிரேரணையின் மீது நாளை பிறக்கும் ஏப்ரல் மாதத்தின் இரண்டாவது வாரத்தில் இரண்டு நாள்கள் நாடாளுமன்றில் விவாதம் நடத்தப்பட இருக்கின்றது.

இந்தப் பிரேரணையை ஏற்று, அது குறித்து விவாதிக்க சபாநாயகர் எடுத்த முடிவு சம்பந்தமாக ஒரு சட்டப் பிரச்சினையைக் கிளப்பி இருக்கிறார் முன்னாள் நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ. தேசபந்து தென்னக்கோனின் பொலிஸ்மா அதிபர் பதவி தொடர்பில் உயர் நீதிமன்றம் ஏற்கனவே ஓர் உத்தரவு பிறப்பித்திருக்கையில், அதைப் பங்கப்படுத்தி மலினப்படுத்தும் விதத்தில் நாடாளுமன்றம் செயல்பட முற்படுவது நீதித்துறைக்கும் சட்டவாக்கத்துறைக்கும் இடையில் முறையற்ற முரண்பாடு ஒன்றை ஏற்படுத்தும் என்று விஜயதாஸ ராஜபக்ஷ சுட்டிக்காட்டுகிறார்.

தேசபந்து தென்னக்கோனை அந்தப் பதவிக்கு முன்னைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பரிந்துரைத்த போது, அதனை அரசமைப்புக் கவுன்ஸில் அங்கீகரித்ததாக ஜனாதிபதிக்கு சபாநாயகரினால் தகவல் வழங்கப்பட்டது. அதன் அடிப்படையில் அவரை பொலிஸ்மா அதிபராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நியமித்தார்.

ஆனால் அரசமைப்புக் கவுன்ஸிலின் முடிவு அதன் தலைவரான அப்போதைய சபாநாயகரால் தவறான விதத்தில் அர்த்தப்படுத்தப்பட்டு, பிழையாக ஜனாதிபதி வழிநடத்தப்பட்டுள்ளார் என்ற அடிப்படையில் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை பரிசீலித்த உயர் நீதிமன்றம், தேசபந்து தென்னக்கோனை பொலிஸ்மா அதிபர் பதவியில் இருந்து இடைநிறுத்தி உள்ளது.

அதனால் அவர் அந்தப் பதவியில் இல்லை. அந்தப் பதவியில் அவர் செயற்படவும் இல்லை. பொலிஸ்மா அதிபர் பதவியில் இருப்பவரைத்தான் நாடாளுமன்றம் மேற்படி பிரேரணை மூலம் விசாரணை நடத்தி வெளியேற்றலாம். இப்போது உயர்நீதிமன்ற உத்தரவினால் பதவியில் இல்லாதவரை அந்தப் பதவியில் இருந்து வெளியேற்ற நாடாளுமன்றம் முயல்வதாகக் கூறுவது அர்த்தமற்றது, அபத்தமானது எனச் சுட்டுகின்றார் விஜயதாஸ ராஜபக்ஷ.

மேலும் இந்தப் பிரேரணை விடயத்தைத் தொடர்ந்து கொண்டு நடத்துவதானால் அதன் பிரகாரம் சம்பந்தப்பட்ட பணியில் இருக்கின்ற பொலிஸ்மா அதிபருக்கு எதிராக அதில் சுமத்தப்படும் குற்றங்களை விசாரணை செய்வதற்கு மூவரடங்கிய விசாரணை குழு நியமிக்கப்பட வேண்டும். அதில் ஒருவரை அந்த விசாரணைக் குழுவின் உறுப்பினராகவும் தலைவராகவும் பிரதம நீதியரசரே நியமிக்க வேண்டியவராக இருக்கிறார். ஏற்கனவே உயர் நீதிமன்றத்தினால் பொலிஸ்மா அதிபர் பதவியில் இருந்து இடைநிறுத்தப்பட்டிருப்பவரை - பதவியில் இருந்து விலக்கி வைக்கப்பட்டவரை- மீண்டும் அப்பதவிலிருந்து அகற்றுவதற்கான ஒரு விசாரணைக்கு அதே உயர் நீதிமன்றத்தின் நீதியரசர் ஒருவரை நியமிக்க பிரதம நீதியரசர் இணங்குவாரா, அது சட்டரீதியாகச் சரியானதா என்ற கேள்விகளை எல்லாம் எழுப்பி இருக்கிறார் விஜயதாஸ ராஜபக்ஷ.

நாடாளுமன்றம் இந்தப் பிரேரணையை பரிசீலனைக்கு ஏற்று விவாதிக்க முற்படுவது, நாடாளுமன்றத்தின் அதிகாரத்தைக் குறைமதிப்புக்கு உள்ளாக்கும் நடவடிக்கையாகிவிடும் என்றும் அவர் சுட்டிக் காட்டுகிறார்.

முன்னாள் சபாநாயகரின் முறையற்ற நடவடிக்கையால் - அரசமைப்பு கவுன்ஸிலின் தீர்மானத்தை குதர்க்கமாக வியாக்கியானம் செய்து பரிந்துரைத்தமையால் - ஏற்பட்ட சட்ட சிக்கலில் இப்போது நாடாளுமன்றமும் முழுமையாக மாட்டிக்கொள்ளப் போவதாகவே தெரிகிறது.

# உள்ளூராட்சி சபை தேர்தல் களம்






# 1989 பட்டலந்தை படுகொலைக்கு விசாரணை; 2009 தமிழர் படுகொலைக்கு எதுவும் இல்லை!

**காரைதீவில் வேட்பாளர் அறிமுக கூட்டத்தில் சாணக்கியன் காட்டம்**

(வி.ரி. சகாதேவராஜா)

1989 ஆம் ஆண்டு இடம் பெற்ற பட்டலந்தை சித்திரவதை தொடர்பாக நாடாளுமன்ற விவாதம் நடக்கிறது. விசாரணை வேண்டுமாம் . ஆனால் 15 வருடங்களுக்கு முன்பு அதாவது 2009 இல் நடந்த தமிழர் படுகொலைக்கு எதுவும் இல்லை. அரசு போலி வேசம் போடுகிறது.

இவ்வாறு காரைதீவில் நேற்று (30) நடைபெற்ற இலங்கை தமிழரசுக் கட்சியின் காரைதீவு பிரதேச சபையின் வேட்பாளர் அறிமுக கூட்டத்தில் பேசிய மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

கடந்த தேர்தலின் பொழுது தமிழ் அரசியல் கைதிகள் படிப்படியாக விடுவிக்கப்படுவார்கள் என்று கூறிய அமைச்சர் விமல் ரத்னாயக்க, யாழ்ப்பாணத்தில் பேசியபோது அவர்களை விடுதலை செய்ய முடியாது என்று தெரிவித்திருக்கின்றார். இதிலிருந்து அவர்களது வேஷம் என்ன என்பதை மக்கள் அறிய வேண்டும் என்றார்.

2024 தேர்தலில் யாழ்ப்பாணத்தில் மூன்று எம்பிக்களைப் பெற்றுக் கொண்ட திமிரில் அரசு இன்று ஆனையிறவு உப்புக்கு றஜலுணு எனப் பெயரிட்டுள்ளது.

தமிழர்களின் அபிலாசை இதுவா? என்று கேட்கின்றோம். நிரந்தரமான அரசியல் தீர்வு ஒன்றுதான் எமது அபிலாசை. பாருங்கள் இன்று உப்பின் பெயரே பிரச்சினையாகி இருக்கின்றது .

இதற்கெல்லாம் தமிழ்நாடாளுமன்ற உறுப்பினர்கள் வாய் திறக்க மாட்டார்கள். அவர்களால் வாய் திறக்க முடியாது. அவர்களுக்கு நாடாளுமன்றத்தில் பேசுவதற்கு கூட நேரம் ஒதுக்குவதில்லை.

இந்த நிலையில் எமது அபிலாசைகளை உரிமைகளை அவர்களால் பெற்றுத்தர முடியுமா? முடியவே முடியாது.

2020 ஆம் ஆண்டு அம்பாறை மாவட்ட தமிழ் மக்கள் தங்களது பிரச்சினை எல்லாம் தீரும் என்று ஒருவருக்கு வாக்களித்தார்கள். அவ்வளவுதான் இன்றுவரை அவரைக் காணவில்லை. ஆசனமும் இழக்கப்பட்டது. எனினும் தமிழ் மக்கள் உரிமைக்கான ஒரே கட்சி தமிழரசுக் கட்சி என்ற ரீதியில் கிடைத்த ஒரே ஒரு தேசிய பட்டியல் ஆசனத்தை கலையரசனுக்கு வழங்கினோம். அவர் கல்முனை வடக்கு பிரதேச செயலகம் தொடக்கம் பல அம்பாறை தமிழர் பிரச்சினைக்கு குரல் கொடுத்தார்.

அதேபோன்று 2024 ஆம் ஆண்டு தேர்தலில் மட்டகளப்பில் மூன்று ஆசனங்களை நாம் பெற்றதை விட அம்பாறையில் ஒரு ஆசனம் பெற்றது எமக்கு சந்தோஷமாக இருந்தது .

கல்முனை வடக்கு பிரச்சினையை நாடாளுமன்றத்தில் எடுத்ததால் அரசு இன்னும் வாய்திறப்பதில்லை.

அதிகாரங்கள் உள்ளூராட்சியில் இருந்து கிளம்ப வேண்டும். வடக்கு, கிழக்கிலே முதலாவது தமிழரசுக் கட்சியின் அறிமுக கூட்டம் காரைதீவில் நடைபெறுகின்றது. எனவே முதலாவது வெற்றியும் இங்கிருந்துதான் ஆரம்பமாகும் என்பதில் எள்ளளவும் சந்தேகம் இல்லை.

அது அவ்வாறிருக்க அண்மையில் மூன்று பேர் சேர்ந்து ஒரு கூட்டமைப்பை உருவாக்கினார்கள்? மூவரில் ஒருவர் இப்பொழுது ஜெயிலில் இருக்கிறார் . மற்றவருக்கு பிரிட்டிஷ் அரசு தடை விதித்திருக்கிறது.

ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் நடந்து ஆறு வருடங்கள் ஆகின்றன. அந்த ஆறு வருட பூர்த்தியாக முன்பே மூன்றாவது தலைவருக்கு எதுவும் நடக்கலாம். மொத்தத்தில் தலைவர் இல்லாத கூட்டணி இருக்கப் போகிறது. பரிதாபம்.

இந்த கருணாவுக்கு எல்லாம் பதில் அளிக்க வேண்டாம் என்று பலரும் சொன்னார்கள். இந்தக் கூட்டமைப்பால் தமிழரசுக் கட்சி பயந்து போயிருக்கிறதாம். இந்த கூட்டமைப்பால் தமிழரசுசி கட்சி பயப்படவில்லை. ஆனால் இது சாரார் பயப்படுகின்றார்கள்.

ஒரு சாரார் மட்டக்களப்பில் வடிவடிப்பவர்கள். ஏனென்றால் அதைவிட குடிகாரன் அவர். அதேபோன்று பெண்கள் பயப்படுகிறார்கள். ஏனெனில் அவர் பெண்புடியனாம். என்னைக் கைது செய்ய வேண்டும் என்று சொல்கிறார்.

ஒரு வரவு செலவு திட்டத்தில் நிதி ஒதுக்கப்பட்டால் அது மாவட்ட செயலகத்துக்கு வந்து பின்னர் பிரதேச செயலகத்துக்கு வந்து செலவழிக்கப்படும். இதில் யார் எப்படி மோசடி செய்வது?.

அப்படி என்ன கைது செய்வதாக இருந்தால் இங்குள்ள சகல பிரதேச செயலாளர்களையும் அரச அதிபரையும் நிதி அமைச்சரையும் ஏன் ஜனாதிபதியையும் கைது செய்ய வேண்டும்.

அரசியலில் உச்சத்துக்குப் போவதாக இருந்தால் ஜெயிலுக்கு போய் வர வேண்டும் என்று சொல்வார்கள். பொறுத்திருந்து பார்ப்போம். – என்றார்.

# சித்திரைப் புத்தாண்டுக்கு முன்னதாக உயர்தரப் பரீட்சை பெறுபேறு வெளியீடு

(எஸ்.ஜினோதன்)

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளை எதிர்வரும் சித்திரைப் புத்தாண்டுக்கு முன்னதாக வெளியிடுவதற்குப் பரீட்சைகள் திணைக்களம் அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருகின்றது என்று தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த ஆண்டு நவம்பர் 25 ஆம் திகதி ஆரம்பமான உயர்தரப் பரீட்சைகள் டிசம்பர் 20 ஆம் திகதி முடிவடைய இருந்த நிலையில் சீரற்ற வானிலை காரணமாக பிற்போடப் பட்டு டிசம்பர் 31 ஆம் திகதி வரை பரீட்சைகள் நடைபெற்றன.

இந்த உயர்தரப் பரீட்சைக்கு மொத்தமாக 3 இலட்சத்து 33 ஆயிரத்து 183 பரீட்சார்த்திகள் தோற்றினார்கள். இதில் பாடசாலை மாணவர்கள் 2 இலட்சத்து 53 ஆயிரத்து 380 பேரும், தனிப்பட்ட பரீட்சார்த்திகள் 79 ஆயிரத்து 795 பேரும் பரீட்சைக்கு முகங்கொடுத்தார்கள்.

எனவே, வருகின்ற ஏப்ரல் மாதத்துக்குள் உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிடுவதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று பரீட்சைகள் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.





# பலஸ்தீனத்துக்கு ஆதரவாக கிண்ணியாவில் நோன்பு தொழுகையின் பின் கவனவீர்ப்பு!

(ஹஸ்பர் ஏ.எச்.)

நோன்புபெருநாள்தினமாகியஇன்று (31) அல் அக்ஸா கல்லூரியில் ஈதுல் பித்ர் நோன்பு பெருநாள் தொழுகையைத் தொடர்ந்து பாலஸ்தீனத்துக்கு ஆதரவு தெரிவித்து பேரணி ஒன்று இடம் பெற்றது.

இஸ்ரேலுக்கு எதிரான இந்தக் கண்டனப் பேரணியில் பலஸ்தீனத்துக்கு ஆதரவாக பல கோசங்களையும் எழுப்பியிருந்தனர். இதனை திருகோணமலை மாவட்ட பள்ளிவாசல் சம்மேளன செயலாளர் எம்.எம்.மஹ்தி ஏற்பாடு செய்திருந்தார்.

இதன் போது பலஸ்தீன கொடியை ஏந்தியவாறு பலர் கலந்து கொண்டனர். இதனைத் தொடர்ந்து திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் கலந்து கொண்ட பலஸ்தீனத்துக்கு ஆதரவான மற்றுமொரு நிகழ்வும் கிண்ணியா குறிஞ்சாக்கேணி வீசி மைதானத்தில் இடம் பெற்றது.

இதன்போது கருத்துத் தெரிவித்த எம்.எம்.மஹ்தி,

பலஸ்தீன மக்கள் பல்வேறு இன்னல்களை எதிர்நோக்கிக் கொண்டு புனிதமான இந்த நாளில் இருக்கிறார்கள். இஸ்ரேல் இன அழிப்பு விடயத்தைச் செய்து கொண்டிருக்கிறது. இதனை இந்த நாடு கண்டிக்க வேண்டும் என்பதுடன் மக்களுக்கு ஆதரவாகக் குரல் கொடுக்க வேண்டும்.

அண்மையில் முஹம்மது ருஸ்தி எனும் இளைஞன் ஸ்டிக்கர் ஒட்டியதற்காக பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி இந்த விவகாரத்தில் தலையிட்டு உடனடியாக அந்த இளைஞனை விடுதலை செய்ய வேண்டும்.

பலஸ்தீன மக்களுக்காக அநுர அரசு குரல் கொடுக்க வேண்டும். பலஸ்தீனர்களுக்கு தனி நாடாக, தனி ராஜியம் என்ற அடிப்படையில் வழங்கப் படவேண்டும்.

இன அழிப்பை செய்யும் இஸ்ரேலியர்களுக்கு எதிராக மக்கள் கொந்தளிக்கும் நிலை காணப்படுகிறது. ஆகவே கைது செய்யப்பட்ட முஹம்மது ருஸ்தி விடுதலை செய்யப்படல் வேண்டும் என்பதை மீண்டும் இங்கு வலியுறுத்துகிறோம்.

தற்போது அரசும் பலஸ்தீன மக்களுக்காக குரல் எழுப்ப வேண்டும் என்று கோரிக்கை விடுக்கிறேன்.- என்றார்.





# கிண்ணியாவில் நோன்பு பெருநாள் தொழுகை

(எச். எம். ஹலால்தீன் )

கிண்ணியா நகர சபை மைதானத்தில் இன்று காலை 7 மணிக்குத் தொழுகை நடை பெற்றது.

இத்தொழுகையில் பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டனர்.

தொழுகையின் பின்னர் ஒருவருக்கொருவர் பெருநாள் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டனர் செய்து கொண்டனர்.







# அட்டாளைச்சேனையில் நோன்புத் தொழுகை!

(சியாத் . எம். இஸ்மாயில்)

அட்டாளைச்சேனை மஜ்ஜிதுல் தஃவா பள்ளிவாசல் ஏற்பாட்டில் நடைபெற்ற புனித நோன்பு பெருநாள் திடல் தொழுகை அட்டாளைச்சேனை பொது விளையாட்டு மைதானத்தில் இன்று திங்கள் கிழமை (31) காலை 6.30 மணிக்கு நடைபெற்றது. இந்த நோன்பு பெருநாள் திடல் தொழுகை மற்றும் பேருரையை மௌலவி ஒ.எல்.எம். முபாறக் (ஸஹ்வி) நிகழ்த்தியதோடு, இதில் பெருந்திரளான ஆண்கள், பெண்கள் கலந்து கொண்டனர்.

இந்த பெருநாள் தினத்தில் முஸ்லீம்கள் செய்ய நற்காரியங்கள் மற்றும் நடந்து கொள்ள வேண்டிய நடைமுறைகள் தொடர்பில் பேருரையில் விரிவாக வலியுறுத்தப்பட்டது.



# அம்பாறை நோன்புப் பெருநாள் தொழுகை!

(பாறுக் ஷிஹான்)

ஈதுல் அல்ஹா புனித நோன்பு பெருநாள் தொழுகை கிழக்கு மாகாணத்தின் பல்வேறு இடங்களில் இன்று (31) நடைபெற்றது.

ஈதுல் அல்ஹா புனித ஹஜ் பெருநாள் தொழுகையும் குத்பா பிரசங்கமும் அம்பாறை மாவட்டம் மருதமுனை கடற்கரை திறந்த வெளியில் இன்று நடைபெற்றது. இதன்போது மருதமுனை தாறுல் ஹுதா மகளிர் இஸ்லாமிய அரபுக் கல்லூரியின் பணிப்பாளர் கலாநிதி எம்.எல்.எம்.முபாறக் மதனி தொழுகை நடத்தி பிரசங்கமும் நிகழ்த்தினார். இதில் ஆண்களும் பெண்களும் கலந்து கொண்டனர்.

இதேவேளை அம்பாறை மாவட்டத்தின் நற்பிட்டிமுனை ,கல்முனை, சம்மாந்துறை, நிந்தவூர், அக்கரைப்பற்று, பொத்துவில், உள்ளிட்ட முஸ்லீம் மக்கள் செறிந்து வாழும் பகுதிகளிலும் பெருநாள் தொழுகைகள் பரவலாக இடம்பெற்றன. மேற்படி பகுதிகளில் இடம்பெற்ற பெருநாள் தொழுகைகளில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டிருந்தனர்.

இன்று நாடளாவிய ரீதியில் இஸ்லாமியர்கள் தமது புனித பெருநாள் தொழுகையை நிறைவேற்றிய பின் அனைவரும் தமது பெருநாள் வாழ்த்துக்களை தமது உறவுகளுக்கும் நண்பர்களுக்கும் தெரிவித்துக் கொண்டனர்.

இதனை தொடர்ந்து தமது பெருநாள் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்ளும் முகமாக உறவினர்கள் நண்பர்கள் மற்றும் அயலவர்களின் வீடுகளுக்கு சென்று பெருநாள் வாழ்த்துக்களை தெரிவித்து கொண்டதோடு உணவு பண்டங்களை பகிர்ந்து கொண்டனர்.

குணம்ஸ் சுப்பர் மார்க்கட்
GUNAAM'S SUPER MARKET
1145 Morningside Ave Unit #33,
Scarborough, ON M1B 0A7
Contact : 416 283 9998



# சமூக மேம்பாட்டுக்கான செயற்பாட்டுக்கு இலத்திரனியல் சாதனங்கள் கையளிப்பு



புரட்டஸ்தாந்து கிறிஸ்தவ அமைப்பின் ஆயர் ஜெரோம் பெர்னாண்டோவின் வழிகாட்டலில் இயங்கும் சமூக நலன்புரி அமைப்பின் ஏற்பாட்டில் சர்வதேச இந்து மத பீட செயலாளர் கலாநிதி சிவஸ்ரீ ராமச்சந்திர குருக்கள் பாபுசர்மாவின் சமூக மேம்பாட்டுக்கான செயற்பாடுகளுக்காக சுமார் இரண்டு லட்சம் ரூபா பெறுமதியான இலத்திரனியல் சாதனங்கள் கையளிக்கப்பட்டன.

அமைப்பின் அங்கத்தவர்களான அருட்தந்தை நிஷான் குரே, ஜெரோம் பெர்னான்டோ ஆகியோரால் நலன்புரி அமைப்பின் சார்பாக இவை கையளிக்கப்பட்டன.




# பேராசிரியர் சி.மௌனகுருவின் நூல் வெளியீடு!

**(பழுவூரான்)**

பௌர்ணமி கலை இலக்கியத் தொடர் – 57 மகுடம் கலை இலக்கிய வட்டம் மட்டக்களப்புத் தமிழ்ச் சங்கத்துடன் இணைந்து நடத்திய பேராசிரியர் சி.மௌனகுருவின் “சுருக்கமும் ஆக்கமும்” ஐந்து கூத்துப் பனுவல்கள் நூல் வெளியீட்டு விழா நேற்று ஞாயிற்றுக்கிழமை (30) மட்டக்களப்புத் தமிழ்ச் சங்க கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

மட்டக்களப்புத் தமிழ்ச் சங்கத் தலைவர் விநாயகமூர்த்தி ரஞ்சிதமூர்த்தி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில்,யாழ்ப்பாணப் பல்கலைக் கழகப் பேராசிரியர் கந்தையா ஸ்ரீ கணேசன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

தமிழர்களின் பாரம்பரியத்தை வெளிக்கொணரும் வகையில் மங்கல விளக்கேற்றலுடன் ஆரம்பமான இந்த நிகழ்வில், தமிழ்த்தாய் வாழ்த்தைக் கிழக்குப் பல்கலைக்கழக சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி பிரியதர்ஷினி ஜெதீஸ்வரனும், வரவேற்புரையை மகுடம் வி.மைக்கல் கொலினும் நிகழ்த்தினர்.

இங்கு வெளியான நூலின் முதல் பிரதியைக் கிழக்குப் பல்கலைக்கழக நூலகர் கலாநிதி தீசன் ஜெயராஜ் மற்றும் கவிஞர் வில்சன் சுதாகர் ஆகியோர் பெற்றுக் கொண்டனர். அத்தோடு சிறப்புப் பிரதிகள் நிகழ்வில் கலந்து கொண்டோருக்கு வழங்கி வைக்கப்பட்டன.

இதன்போது வெளியீட்டுரையை மட்டக்களப்புத் தமிழ்ச் சங்கப் பொதுச் செயலாளர் சட்டத்தரணி மு.கணேசராசாவும், நூல்நயவுரையைக் கல்வியமைச்சின் மட்டக்களப்பு வலய இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி எம்.பி.ரவிச்சந்திராவும் ஏற்புரையையும் நன்றியுரையையும் இணைத்ததாக நூலாசிரியர் பேராசிரியர் சி.மௌனகுருவும் ஆற்றினர்.

இந்தப் புத்தக வெளியீட்டின் போது ஆடல் நிலம் குழுவினரால் “பஞ்சநதிகளின் கீதங்கள்” எனும் கருப்பொருளில் கூத்துப் பாடல்கள் இசைக்கப்பட்டன.

இந்த நிகழ்வுகளை தனது வசீகரக் குரலால் தமிழூராள் அனுஷ்திக்கா தொகுத்து வழங்கினார்.








# கற்பிட்டியில் இடம்பெற்ற நோன்புத் தொழுகை

**(கற்பிட்டி எம். எச். எம். சியாஜ்)**

கற்பிட்டி அனைத்து ஜும்ஆ பள்ளி வாசல்களின் ஏற்பாட்டில் அல் அக்ஸா தேசிய பாடசாலை மைதானத்தில நோன்புப் பெருநாள் திடல் தொழுகை இடம்பெற்றது. அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா கற்பிட்டி கிளையின் செயலாளர் அஷ்ஷேய்க் மிக்தாத்தால் (ரஹ்மானி) குத்பா பேருரை நிகழ்த்தப்பட்டது.





# உடப்பு முஹைதீன் ஜு ம்மா பள்ளிவாசலில் புனித நோன்பு பெருநாள்

**(உடப்பு க.மகாதேவன்)**

உடப்பு முஹைதீன் ஜும்மா பள்ளி வாசலில் புனித நோன்பு பெருநாள் நிகழ்வுகள் இன்று திங்கட்கிழமை (31) நடைபெற்றன.

காலை 7.30 மணிக்கு புனித ரம்ழான் தொழுகைக்காக இஸ்லாமிய அன்பர்கள் தமது பள்ளிவாசலில் கூடினர்.

இதன்போது பெண்களும் தமது தொழுகைகளில் ஈடுபட்டனர். தொழுகை முடிந்து தமது பெருநாள் சந்தோஷங்களை ஒவ்வொருவரும் தமது சகாக்களை ஆரத்தழுவிக் கொண்டனர்.

# கல்முனை சந்தான ஈஸ்வரர் ஆலய திருவிழா நாளை ஆரம்பமாகிறது!

**(வி.ரி.சகாதேவராஜா)**

வரலாற்று பிரசித்திபெற்ற கல்முனை நகர் வளர் கௌரி அம்பிகை உடனுறை சந்தான ஈஸ்வரர் தேவஸ்தான வருடாந்தத் திருவிழா நாளை (01) செவ்வாய்க்கிழமை காலை 10.41 முதல் 12.11 மணிவரையான சுபமுகூர்த்த வேளையில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

கொடியேற்றத் திருவிழாவில் கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்த லால் ரத்னசேகர கலந்து கொள்ளவுள்ளார்.

தொடர்ந்து பத்து நாள்கள் பகல் இரவுத் திருவிழாக்கள் நடைபெற்று 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தேரோட்டம் இடம்பெறும். 12 ஆம் திகதி சனிக்கிழமை காலை தீத்தோற்சவம் இடம்பெறும் என்று ஆலய அறங்காவலர் சபைத் தலைவர் வேலாயுதபிள்ளை செவ்வேட்குமரன் தெரிவித்தார்.

மகோற்சவத்திருவிழா கிரியைகளை மகோற்சவ பிரதம குருவான யாழ்ப்பாணம் வாமதேவ சிவாச்சாரியார் சிவஸ்ரீ சி. குகனேசக் குருக்கள், ஆலய பிரதம குரு சிவஸ்ரீ ஸ்ரீ ராமச்சந்திர தவசீலக் குருக்கள் முன்னிலையில் நடத்தவுள்ளார்.

தினமும் பகல் திருவிழா இரவு திருவிழா இடம்பெற்று அன்னதானமும் இடம்பெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஐந்தாம் திகதி மாம்பழத் திருவிழாவும் , ஆறாம் திகதி திருவிளக்கு பூசையும், ஏழாம் திகதி பக்தி முக்தி பெருவிழாவும், எட்டாம் திகதி வேட்டைத் திருவிழாவும்,



ஒன்பதாம் திகதி திருக்கல்யாணத் திருவிழாவும், பத்தாம் திகதி சப்பரத் திருவிழாவும் இடம் பெறவுள்ளன.



# பாதகமான இணக்கப்பாடுகளையும் மாற்றியமைத்து நாட்டின் பிரஜைகளை வாழ வைப்பதே எமது கடமை!

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவிப்பு

எமது நாட்டின் வங்குரோத்து நிலையால் மக்கள் பல இன்னல்களை எதிர்கொண்டுள்ளனர். இந்த மக்களுக்கு ஆற்ற வேண்டிய பெரும் பணி எம்மத்தியில் இருந்து வருகிறது. பசியாலும் வேதனையாலும் வாடும் மக்களின் வலியையும் கண்ணீரையும் புரிந்து கொண்டு அவர்களுக்கான கடமைகளை நிறைவேற்ற வேண்டியது எமது பொறுப்பாகும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசஸ தெரிவித்தார்.

சமாதான நீதிவான், கொரிகஸ்வெவ சந்திரரதன நாயக்க தேரருக்கு மல்வத்து பீடத்தின் மகாசங்கத்தினரின் ஆசியுடன் இரண்டாம் சங்கநாயக பதவிப் பத்திரம் மற்றும் கௌரவப் பட்டம் வழங்கும் நிகழ்வில் இன்று கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

மக்களுக்கு தீங்கு விளைவிக்கும் வகையில் அமைந்து காணப்படும் ஐ.எம்.எவ். இணக்கப்பாட்டை மக்களுக்குச் சாதகமான ஒன்றாக மாற்ற வேண்டும். மக்களை வாழ வைப்பது எமது கடமையாகும். இதனை நிறைவேற்ற நாம் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும்.

இந்த நாட்டுக்கு மக்களது பிரச்சினைகளை விளங்கிக் கொள்ளும் தலைவர் ஒருவர் தேவை. துன்பப்படும் மக்களை விடுவிக்கும் பொறுப்பை எந்தவித பின்வாங்கலும் இன்றி நிறைவேற்ற வேண்டும். வங்குரோத்து நிலையில் இருந்து மீளும் பயணத்தில் பெரும் செல்வந்தர்கள் அதிக சுமைகளைச் சுமக்க வேண்டும். துன்புறும் மக்களுக்கான எமது பொறுப்பை சரியாக நிறைவேற்றி அனைவரும் வாழக்கூடிய தாய்நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டும்.

இலங்கை பாலி மற்றும் பௌத்த பல்கலைக்கழகத்தில் பட்டமும் முதுகலைமானிப் பட்டமும் இத்தேரர், மினிபே பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள ஸ்ரீ சங்கபோ பிரிவேனில் சேவையாற்றி ஏராளமான மக்களுக்கு வழிகாட்டியுள்ளார். ஞாயிறு தர்ம போதனை பாடசாலை முறையை மேம்படுத்தி கட்டியெழுப்புவதிலும் இவர் பெரும் பங்காற்றியுள்ளார்.

சமயப் பணியில் ஈடுபட்டுக் கொண்டு சமூக சேவையிலும் ஈடுபட்டுத் துன்புறும் மக்களுக்காகப் பெரும் சேவையை இவர் ஆற்றியுள்ளார்.– என்றார்.









# தந்தை செல்வாவின் 127ஆவது ஜனன தினம்: யாழ். நினைவிடத்தில் ரவிகரன் எம்.பி. அஞ்சலி!

(விஜயரத்தினம் சரவணன்)

இலங்கைத் தமிழ் அரசுக்கட்சியின் ஸ்தாபகத் தலைவர் சாமுவேல் ஜேம்ஸ் வேலுப்பிள்ளை செல்வநாயகத்தின் 127ஆவது ஜனனதினம் இன்று (31) பல்வேறு இடங்களிலும் நினைவு கூரப்படுகின்றது.

இந்த நிலையில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், இலங்கைத் தமிழ் அரசுக்கட்சியின் முல்லைத்தீவு மாவட்ட செயலாளருமான துரைராசா ரவிகரன் தமிழ் அரசுக் கட்சியின் ஸ்தாபகத் தலைவர் தந்தை செல்வாவுக்கு யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள தந்தை செல்வா நினைவிடத்தில் மலர்தூவி அஞ்சலிகளை மேற்கொண்டார்.

அஞ்சலி நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரனுடன், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் முல்லைத்தீவு மாவட்ட பிரதிநிதிகள் சிலரும் கலந்துகொண்டனர்.










# மன்னாரில் நோன்பு பெருநாள் தொழுகை!

புனித நோன்பு பெருநாள் தொழுகை மன்னார் மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் இன்று (31) நடைபெற்றது.

புனித நோன்புப் பெருநாள் தொழுகையும் பிரசங்கமும் இன்று திங்கட்கிழமை (31) காலை மன்னார் மூர்வீதி ஜும்மா பள்ளியில் நடைபெற்றது. மூர்வீதி ஜும்மா பள்ளி வாயலின் பிரதான மௌலவி அசீம் தலைமையில் பெருநாள் தொழுகை நடத்தி பிரசங்கமும் நிகழ்த்தினார்.

இதேவேளை, மன்னார் மாவட்டத்தில் முஸ்லிம் மக்கள் செறிந்து வாழும் பகுதிகளிலும் பெருநாள் தொழுகைகள் பரவலாக இடம்பெற்றன.

இன்று நாடளாவிய ரீதியில் இஸ்லாமியர்கள் தமது புனித பெருநாள் தொழுகையை நிறைவேற்றிய பின் அனைவரும் தமது பெருநாள் வாழ்த்துக்களை தமது உறவுகளுக்கும் நண்பர்களுக்கும் தெரிவித்துக்கொண்டனர்.

இதனை தொடர்ந்து தமது பெருநாள் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்ளும் முகமாக உறவினர்கள் நண்பர்கள் மற்றும் அயலவர்களின் வீடுகளுக்கு சென்று பெருநாள் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டனர்.





# ஐந்து முறை உயிர் தப்பிய புட்டின்: மாஸ்கோவில் வெடித்து சிதறிய கார் புட்டினுக்கு வைக்கப்பட்ட குறியா?

● ஐங்கரன் விக்கினேஸ்வரா

(ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினைப் பொறுத்த வரையில், குறைந்தது ஐந்து படுகொலை முயற்சிகளில் இருந்து தப்பியுள்ளார். கடந்த வாரம் நடந்த ஒரு முயற்சியைத் தவிர்த்து, இதுவரை புட்டின் மீது ஐந்து படுகொலை முயற்சிகள் நடந்துள்ளன.)

உலகில் அதிகபட்ச பாதுகாப்பைக் கொண்ட தலைவர்களில் ஒருவராக ரஷ்ய அதிபர் புட்டின் இருக்கிறார். இந்தச் சூழலில் ரஷ்ய அதிபர் புட்டினின் பாதுகாப்பு அரணுக்கான ஒரு கார் திடீரென வெடித்துச் சிதறியுள்ளது. அந்த கார் ரஷ்ய உளவுப்படை அலுவலகம் முன்பு நிறுத்தி வைக்கப்பட்டபோது திடீரென வெடித்துச் சிதறியிருக்கிறது.

**புட்டின் மீது கொலை முயற்சி?**

ரஷ்ய அதிபராக இருக்கும் புட்டின், உலகில் அதிகபட்ச பாதுகாப்பைக் கொண்ட தலைவர்களில் ஒருவர் ஆவார். அவரது உயிருக்குப் பல அச்சுறுத்தல்கள் இருப்பதால் அவரை பாதுகாக்க ரஷ்ய உளவுத்துறை (சீக்ரெட் சர்வீஸ்) பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

அவர் ஒரு இடத்துக்குச் செல்வதற்குப் பல வாரங்களுக்கு முன்பே கூட பாதுகாப்பு ஏற்பாடுகள் தொடங்கிவிடுமாம். கடந்த வார இறுதியில் மார்ச் 29இல் புட்டினின் பாதுகாப்பு கார் ஒன்று திடீரென வெடித்துச் சிதறியுள்ளது.

ரஷ்யாவை சேர்ந்த ஆரஸ் நிறுவனம் தயாரித்த இந்த ஆரஸ் லிமோசின் கார் மாஸ்கோ சாலைகளில் திடீரென வெடித்துச் சிதறியுள்ளது. இது தொடர்பான வீடியோவும் இணையத்தில் வெளியாகி பரபரப்பை கிளப்பியுள்ளது.

இந்த கார் ரஷ்ய உளவுத்துறையான எவ்.எஸ்.பி. தலைமையகத்துக்கு அருகே நிறுத்தப்பட்டு இருந்த நிலையில், திடீரென அந்த கார் வெடித்துத் தீப்பிடித்தது. இந்த காரின் மதிப்பு 3,55,796 டொலர் இருக்கும் என சொல்லப்படுகிறது. முதலில் இயந்திரத்தில் தீ விபத்து ஏற்பட்ட நிலையில், பிறகு அது மெல்ல உட்புறம் வரை பரவியதாகத் தெரிகிறது.

இந்த கார் ரஷ்ய அதிபர் மாளிகையின் அதிபர் சொத்து மேலாண்மைத் துறைக்குச் சொந்தமானது என்று கூறப்படுகிறது. இருப்பினும், திடீரென கார் வெடித்துச் சிதற என்ன காரணம்? கார் வெடித்துச் சிதறிய போது உள்ளே யாராவது இருந்தார்களா என்பது போன்ற தகவல்கள் தெளிவாகத் தெரியவில்லை. அதேநேரம் இந்த சம்பவத்தால் யாருக்கும் காயம் அல்லது உயிரிழப்புகள் ஏற்படவில்லை என்று கூறப்படுகிறது.

**திடீரென வெடித்துச் சிதறிய கார்**

72 வயதான ரஷ்ய அதிபர் புட்டின் பெரும்பாலும் ரஷ்ய சொந்த நிறுவனமான ஆரஸ் கார்களையே அதிகம் பயன்படுத்துவார். மேலும் வட கொரியாவின் கிம் ஜாங் உன் உட்பட வெளிநாட்டுத் தலைவர்களுக்கும் புதின் ஆரஸ் கார்களையே பரிசாக அளித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

ரஷ்ய அதிபர் புட்டினை கொலை செய்யச் சதித்திட்டங்கள் நடந்து வருவதாகக் கூறப்படும் நிலையில், இந்தச் சம்பவம் பரபரப்பை கிளப்புவதாக இருக்கிறது. அதேநேரம் இது சம்பவம் தொடர்பாக ரஷ்ய அரசு இதுவரை எந்தவொரு விளக்கத்தையும் அளிக்கவில்லை.

கடந்த சில மாதங்களுக்கு முன்பு, புட்டினின் உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்த எந்தவொரு நாடு முயன்றாலும் அணு குண்டை வீசுவோம் என்று ரஷ்ய அதிபர் மாளிகை எச்சரித்து இருந்தது. மேலும், கடந்த காலங்களில் பல முறை புட்டின் மீது படுகொலை முயற்சிகள்

தொடர்ச்சி▼







# ஐந்து முறை உயிர் தப்பிய புட்டின்: மாஸ்கோவில் வெடித்து சிதறிய கார் புட்டினுக்கு வைக்கப்பட்ட குறியா?

தொடர்ச்சி▲

நடந்துள்ளதாக உக்ரைன் ராணுவ உளவுத்துறைத் தலைவர் கைரிலோ புடனோவ் கூறியிருந்தார்.

சமீபத்தில் தான் உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கியும் கூட ரஷ்ய அதிபர் புட்டின் சீக்கிரம் உயிரிழப்பார் என்று கூறியிருந்தார். அதாவது புட்டின் உடல் நலக் குறைவால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் விரைவில் இறந்துவிடுவார் என்றும் குறிப்பிட்டுள்ளார். மேலும், புட்டின் இறந்துவிட்டால் எல்லாமே ஓவர் என்றும் அவர் கூறியிருந்தது குறிப்பிடத்தக்கது.

### பல முறை கொலை முயற்சி

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் வார இறுதியில் ஒரு படுகொலை முயற்சியில் இருந்து தப்பியதாக மாஸ்கோ தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆனால் இது ஒன்றும் முதல் முறை அல்ல. குறைந்தது ஐந்து முறை இதுபோல் கொலை முயற்சிகளில் இருந்து அவர் எந்த காயமும் இல்லாமல் தப்பியுள்ளார்.

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் மாஸ்கோவில் கொலை முயற்சியில் இருந்து தப்பியதாக மேற்குலக ஊடகங்களில் பரவலாகச் செய்திகள் வெளியிட்டுள்ளன.

2022 ஆண்டு பிப்ரவரியில் ரஷ்யா உக்ரைனை தாக்கியதில் இருந்து புட்டினின் உடல்நிலை குறித்தும், அவரது உயிருக்கு இருக்கும் அச்சுறுத்தல் குறித்தும் தொடர்ந்து வதந்திகள் பரவி வருகின்றன.

### அஜர்பைஜானில் கொலை முயற்சி

2002 ஆம் ஆண்டு புட்டின் அஜர்பைஜான் சென்றிருந்தபோது, அவரைக் கொல்ல சதி செய்ய ஈராக்கியர் ஒருவர் கைது செய்யப்பட்டார். அந்த நபர் ஆப்கானிஸ்தான் மற்றும் செச்சென் (Chechen) கிளர்ச்சிப் படைகளுடன் தொடர்பு வைத்திருந்ததாகக் கூறப்படும் ஈராக் குடிமகன் என அடையாளம் காணப்பட்டார்.

அவர் தனது திட்டத்தைச் செயல்படுத்தும் நேரத்தில், பாதுகாப்புப் படையினர் சதித்திட்டத்தைப் பற்றி அறிந்து அந்த நபரையும் அவரது கூட்டாளி ஒருவரையும் கைது செய்தனர். இருவருக்கும் 10 ஆண்டுகள் சிறை தண்டனை வழங்கப்பட்டது.

2002 ஆம் ஆண்டு நவம்பரில், புட்டினைக் கொல்லும் இன்னொரு திட்டம் குறித்து அதிகாரிகளுக்குத் தகவல் கிடைத்தது. உள்ளூர் தகவல்களின்படி, புடின் செல்லும் நெடுஞ்சாலையில் 40 கிலோ வெடிபொருள்கள் வெடிக்கக் காத்திருந்தன.

பழுது பார்ப்பவர்கள் போல் மாறுவேடமிட்டு வந்த சிலர் வெடிகுண்டை அங்கு வைத்ததாக கூறப்படுகிறது. ஆனால் ஒரு மணி நேரம் கழித்து, சாதனங்கள் மர்மமான முறையில் மறைந்து விட்டன மற்றும் புடினின் கார் திசைதிருப்பப்பட்டது.

இன்றுவரை, அதிகாரிகள் இந்த விஷயத்தை வெளிப்படுத்த மறுக்கிறார்கள் மற்றும் அது நடக்கவில்லை என்று கூட மறுக்கிறார்கள்.




### 2003 பிரித்தானியாவில் கொலை முயற்சி

ஒக்ரோபர் 2003 இல் புட்டினைக் கொல்லும் சதித்திட்டத்தை பிரித்தானிய பொலிஸின் பயங்கரவாத எதிர்ப்புப் படை முறியடித்ததாகக் கூறப்படுகிறது.

கொலையாளிகள் என்று சந்தேகிக்கப்படும் இரண்டு ஆண்கள் புட்டினைக் கொல்ல சதித்திட்டம் தீட்டியதற்காக கைது செய்யப்பட்டனர். அவர்களில் ஒருவர் முன்னாள் ரஷ்ய இரகசிய உளவுச் சேவை தாக்குதலாளி என்று கூறப்பட்டது.

விசாரணைகளின் படி, இந்த ஆண்கள் மூன்று ஆண்டுகளுக்கு முன்பு பிரிட்டனுக்குத் திரும்பியவர்கள் மற்றும் புட்டினை படுகொலை செய்ய ஒப்பந்த கொலையாளியால் பணியமர்த்தப்பட்டனர்.

ஆனால் பொலிஸார் பின்னர் 40 மற்றும் 36 வயதுடைய இருவரை விசாரணைக்குப் பிறகு விடுவித்தனர். மேலும் அவர்கள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாது என்றும் கூறப்பட்டது.

### 2012 செச்சென் சதித்திட்டம்

2012 ஆம் ஆண்டில், ரஷ்ய சிறப்புப் படைகள் செச்சென் கிளர்ச்சியாளர் ஆடம் ஒஸ்மாயேவை கைது செய்தனர். அவர் பிரித்தானியாவுடன் தொடர்பு கொண்டிருந்ததாகக் கூறப்படுகிறது. அவர் உக்ரேனிய கருங்கடல் துறைமுகமான ஒடேசாவில் பிடிபட்டார்.

அதேவேளை, உக்ரைன் போர் ஆரம்பமாகியதன் பின்னர், 2022ம் ஆண்டு மே மாதம், உக்ரைனின் பாதுகாப்பு உளவுத்துறைத் தலைவர் கைரிலோ புடானோவ், ரஷ்ய-உக்ரைன் போரின் தொடக்கத்தில் புடினின் உயிருக்கு ஒரு “தோல்வியுற்ற முயற்சி” நடந்ததாகக் கூறியதாக செய்திகள் வெளிவந்தன. இந்த தாக்குதலுக்கு யார் காரணம், எங்கு நடந்தது என்பதும் தெரியவில்லை.

# ஊரக உள்ளாட்சி தேர்தல்களை நடத்தக்கோரி உண்ணாவிரதம்



ஊரக உள்ளாட்சி தேர்தல்களை உடனடியாக நடத்தக்கோரி தன்னாட்சி அமைப்புகளின் சார்பில் உண்ணாவிரத போராட்டம் சென்னையில் நேற்று நடைபெற்றது.

கிராமங்களுக்கு வளர்ச்சியை கொண்டு வரவும், ஊராட்சிகளின் பணிகள் தொடரவும், ஏழை, எளிய கிராம மக்களுக்கு திட்டங்கள் முறையாக கிடைக்கவும், மக்கள் பங்கேற்புடன் கிராம சபைகள் முறையாக நடக்கவும் தமிழகத்தில் 28 மாவட்டங்களில் ஊரக உள்ளாட்சித் தேர்தல்களை உடனடியாக நடத்த வேண்டும் என வலியுறுத்தி, தன்னாட்சி, அறப்போர், மக்களின் குரல் உள்ளிட்ட அமைப்புகள் சார்பில் சென்னை எழும்பூரில் நேற்று உண்ணாவிரத போராட்டம் நடைபெற்றது.

இந்த போராட்டம் குறித்து தன்னாட்சி மக்கள் இயக்கத்தின் துணை தலைவர் நந்தகுமார் சிவா செய்தியாளர்களிடம் தெரிவிக்கையில்,

"தமிழகத்தில் 2019 ஆம் ஆண்டில் தேர்தல் நடந்த 28 மாவட்டங்களுக்கான ஊரக உள்ளாட்சித் தேர்தல்களை 2025 ஜனவரி 5 ஆம் திகதிக்குள் மாநில தேர்தல் ஆணையம் நடத்தி முடித்திருக்க வேண்டும்.

ஆனால் இதுவரை அதற்கான எந்த பணிகளும் தொடங்கப்படவில்லை. இதனால் 9,624 கிராம ஊராட்சி தலைவர்கள், 76,746 கிராம ஊராட்சி வார்டு உறுப்பினர்கள், 5,090 ஒன்றிய கவுன்சிலர்கள், 515 மாவட்ட கவுன்சிலர்கள் பொறுப்புகளுக்கு தேர்தல் நடத்தப்படாமல் இருக்கிறது.

மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களின் கையில் இருக்க வேண்டிய கிராம நிர்வாகம், தற்போது தனி அலுவலர்கள் கையில் கொடுக்கப்பட்டுள்ளது. நகரமயமாக்கலை காரணம் காட்டி ஊரக உள்ளாட்சி தேர்தல்களை தள்ளிபோடுவது ஏற்புடையதல்ல.

உரிய காலத்தில் முறையான தேர்தல் என்பது மக்களின் அடிப்படை ஜனநாயக உரிமையாகும். எனவே ஊரக உள்ளாட்சி தேர்தல்களை தள்ளிப் போடாமல் விரைந்து நடத்த மாநில தேர்தல் ஆணையமும், தமிழக அரசும் முன்வரவேண்டும்." என்றார்.

# கோடை வெயிலால் தவிக்கும் பறவைகளுக்கு நீரும், உணவும் அளிப்போம்; முதல்வர் ஸ்டாலின்



கோடை வெயிலால் தவிக்கும் பறவைகளுக்கு நீரும் உணவும் கொடையளிப்போம் என தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

தமிழகத்தில் நாளுக்கு நாள் வெயிலின் தாக்கம் அதிகரித்து வரும் நிலையில், நேற்று மட்டும் 6 இடங்களில் வெயில் உச்சம் தொட்டது. அதிகபட்சமாக சேலம் மாவட்டத்தில் 102 டிகிரி ஃபாரன்ஹீட் வெயில் பதிவானது. ஈரோடு, வேலூர், கரூர், மதுரையில் தலா 101 டிகிரி பாரன்ஹீட்டும், தருமபுரியில் 100 டிகிரி ஃபரான்ஹீட்டும் வெப்பம் பதிவானது. வெயில் சுட்டெரித்ததால் மக்கள் கடும் அவதிக்குள்ளாகினர். வெயிலில் இருந்து தற்காத்துக் கொள்ள அரசு மக்களுக்கு பல்வேறு வழிகாட்டுதல் நெறிமுறைகளை வெளியிட்டுள்ளது.

இந்நிலையில், பறவைகளுக்கு இந்த கோடை காலத்தில் உணவு, நீர் வழங்க முதல்வர் ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார். இது தொடர்பாக அவர் தனது எக்ஸ் சமூகவலைதளத்தில் பகிர்ந்த பதிவில், "கோடை வெயிலால் தவிக்கும் பறவைகளுக்கு நீரும் உணவும் கொடையளிப்போம்." எனக் குறிப்பிட்டுள்ளார்.

# அன்பு, அமைதி, நல்லிணக்கம், சகோதரத்துவம் வளரட்டும்

## விஜய் ரம்ஜான் வாழ்த்து செய்தி



தமிழகத்தில் இன்று ரம்ஜான் பண்டிகை கொண்டாடப்படுகிறது. இதனையொட்டி இஸ்லாமிய மக்களுக்கு த.வெ.க. தலைவர் விஜய் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இதனையொட்டி த.வெ.க. தலைவர் விஜய் எக்ஸ் சமூக வலைதளத்தில் வெளியிட்ட வாழ்த்துச் செய்தியில்,

"நோன்பிருந்து உறவுகளுடன், நட்பு நெஞ்சங்களிடன் அன்பைப் பரிமாறி ஈகைத் திருநாளாம் ரமலான் திருநாளைக் கொண்டாடும், உலகெங்கும் வாழும் இஸ்லாமிய உறவுகள் அனைவருக்கும் எனது உளமார்ந்த நல்வாழ்த்துகள். இந்நாளில் அனைவரிடமும் அன்பு, அமைதி, சகோதரத்துவம், நல்லிணக்கம், ஆகியவை வளர்பிறையாக வளர வாழ்த்தி மகிழ்கிறேன்." என்று குறிப்பிட்டுள்ளார்.

வாழ்த்து அட்டையாக இதனை அவர் பகிர்ந்துள்ளார். அந்த வாழ்த்து அட்டையில் வேலுநாச்சியார், காமராஜர், பெரியார், அம்பேத்கர், அஞ்சலையம்மாள் படங்கள் இடம்பெற்றுள்ளன.

# காசாவில் 8 மருத்துவர்கள் உயிரிழப்பு; செஞ்சிலுவைச் சங்கம் கண்டனம்!





தெற்கு காசாவின் ரஃபாவில் பணியில் இருந்த எட்டு மருத்துவர்கள் கொல்லப்பட்டனர். இந்த சம்பவத்துக்கு சர்வதேச செஞ்சிலுவை மற்றும் செம்பிறை சங்கங்களின் கூட்டமைப்பு (IFRC) கோபமடைந்துள்ளதாக கூறியுள்ளது.

மார்ச் 23 அன்று அல்-ஹஷாஷினில் ஒன்பது பேர் கொண்ட அம்பியூலன்ஸ் குழு மீது கடுமையான தாக்குதல் நடத்தப்பட்டதாக IFRC தெரிவித்துள்ளது.

ஒரு வாரமாக அனுமதி மறுக்கப்பட்ட பின்னர் ஞாயிற்றுக்கிழமை அவர்களின் உடல்கள் மீட்கப்பட்டன. ஒரு மருத்துவர் இன்னும் காணவில்லை.

பாலஸ்தீன ரெட் க்ரெசண்ட் சொசைட்டி (PRCS), தங்கள் ஊழியர்களின் உடல்களும், காசாவின் ஹமாஸ் நடத்தும் சிவில் பாதுகாப்பு நிறுவனத்தின் ஆறு உறுப்பினர்களின் உடல்களும், ஒரு ஐ.நா. ஊழியரின் உடல்களும் கண்டெடுக்கப்பட்டதாகக் கூறியது.

அந்த வாகனத் தொடரணி மீது யார் துப்பாக்கிச் சூடு நடத்தினர் என்பதை அவர்கள் கூறவில்லை. ஆனால் ஹமாஸ் இந்த தாக்குதலுக்கு இஸ்ரேல் பாதுகாப்புப் படைகளைக் குற்றம் சாட்டியது.

மூத்த ஹமாஸ் அதிகாரி பாசெம் நைம் தாக்குதலைக் கண்டித்துள்ளார். "சர்வதேச மனிதாபிமான சட்டத்தின் கீழ் பாதுகாக்கப்பட்ட மீட்புப் பணியாளர்களை குறிவைத்து கொல்வது ஜெனீவா உடன்படிக்கைகளை அப்பட்டமாக மீறுவதாகவும், போர்க்குற்றமாகவும் அமைகிறது" என்று அவர் கூறினார்.

ஜனவரியில் தொடங்கிய முதல் கட்ட போர் நிறுத்தம் முடிவடைந்து, ஒப்பந்தத்தின் இரண்டாம் கட்ட பேச்சுவார்த்தைகள் முடங்கிய பின்னர், மார்ச் 18 அன்று காசாவில் இஸ்ரேல் தனது இராணுவத் தாக்குதலை மீண்டும் தொடங்கியது.

காசாவில் இஸ்ரேலிய தாக்குதல்களில் 900 இற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டதாக ஹமாஸ் நடத்தும் சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

2023 ஒக்டோபர் 7 அன்று ஹமாஸ் தெற்கு இஸ்ரேலைத் தாக்கியபோது போர் தொடங்கியது, சுமார் 1,200 பேர் கொல்லப்பட்டனர் மற்றும் 251 பேரை காசாவிற்கு சிறைபிடித்தனர்.

இஸ்ரேல் ஒரு பெரிய இராணுவத் தாக்குதலுடன் பதிலளித்தது, இது 50,000 இற்கும் மேற்பட்ட பாலஸ்தீனியர்களைக் கொன்றது என்று காசாவின் ஹமாஸ் நடத்தும் சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

# பிரித்தானியா – அமெரிக்கா இடையிலான பொருளாதார ஒப்பந்த பேச்சு தொடரும்



பிரித்தானியாவுக்கும் அமெரிக்காவிற்கும் இடையிலான பொருளாதார ஒப்பந்தம் குறித்த ஆக்கபூர்வமான பேச்சுவார்த்தைகள் வேகமாக தொடர்வதற்கு பிரித்தானிய பிரதமர் கெய்ர் ஸ்டார்மரும் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பும் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

நேற்றிரவு குறித்த இருவரும் இது தொடர்பில் தொலைபேசி ஊடாக உரையாடினர் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

தேவையேற்படின் அமெரிக்க வர்த்தக வரிகளுக்கு எதிராக பதிலடி கொடுக்க பிரித்தானிய அரசாங்கம் தயாராக இருப்பதாக அந்நாட்டு அரச தரப்புகள் தெரிவித்துள்ளன.


எதிர்வரும் புதன்கிழமை முதல் அமுலாகவுள்ள பிரித்தானிய மகிழுந்து இறக்குமதிகள் மீதான அமெரிக்காவின் 25 சதவீத வரிவிதிப்புக்கு முன்னதாக, இறுதி நேரத்தில் வரிவிலக்கு பெறும் நோக்கில் பேச்சுவார்த்தைகள் இடம்பெறுகின்றன.

அமெரிக்காவுடன் வர்த்தகப் போரில் ஈடுபட விரும்பவில்லை என பிரித்தானிய பிரதமர் ஏற்கனவே தெரிவித்திருந்தார்.

எனினும், பிரித்தானியாவுக்கு விலக்கு அளிக்கும் ஒப்பந்தம் எட்டப்படாவிட்டால், அமெரிக்கா மீது பரஸ்பர வரிகளை அறிமுகப்படுத்தும் உரிமையை கொண்டுள்ளதாக பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

# ரஷ்ய எண்ணெய் மீது இரண்டாம் நிலை வரிகளை விதிப்பதற்கு ட்ரம்ப் தயார்





அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் ரஷ்ய எண்ணெய் மீது 25 சதவீதம் முதல் 50 சதவீதம் வரை இரண்டாம் நிலை வரிகளை விதிப்பதாக அச்சுறுத்தும் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

ஒரு மாதத்திற்குள் உக்ரைன் போர் நிறுத்த ஒப்பந்தத்திற்கு ரஷ்ய ஜனாதிபதி விளாடிமின் புடின் உடன்படவில்லை என்றால், ரஷ்ய எண்ணெய் மீது வரிகளை விதிப்பதாக ட்ரம்ப் கூறியுள்ளார்.

இந்த விடயத்தில் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமின் புடின் மீதும் டொனால்ட் ட்ரம்ப் தனது அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ளார்.

பக்கங்கள் - 3

# கனடா முரசு

திங்கட்கிழமை 31/03/2025

## கனேடிய தேர்தலில் நான்கு தமிழர்கள்



C3 ▶



# கனடா மீது ட்ரம்ப் விதித்த வரிகளால் நெருக்கடியில் அமெரிக்க மக்கள்

கனடா மீதான அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் வரி விதிப்பு நடவடிக்கைகளால் மில்லியன் கணக்கான அமெரிக்க மக்கள் மிகுந்த நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கனேடிய சாஃப்ட்வுட் மரத்தின் மீது கிட்டத்தட்ட இருமடங்கான வரிகளை விதிக்க ட்ரம்ப் நிர்வாகம் திட்டமிட்டுள்ளது.

இது ஒருகட்டத்தில் அமெரிக்காவில் டொய்லெட் பேப்பர் பற்றாக்குறைக்கு தள்ளப்படும் மிக மோசமான சூழலை உருவாக்கும் என்றே அஞ்சப்படுகிறது.

C2 ▶



# அமெரிக்கப் பயணத்திற்கான வழிகாட்டல்களை வெளியிட்டது மொன்றியல் பல்கலைக்கழகம்



அமெரிக்காவுக்கான கல்விசார் பயணங்களை மேற்கொள்வோருக்காக மொன்றியல் பல்கலைக்கழகம் Université de Montréal புதிய பயண வழிகாட்டுதல்களை வெளியிட்டுள்ளது.

பல்கலைக்கழக சமூகத்தினர் அமெரிக்க எல்லையில் தடுத்து நிறுத்தப்படுதல் மற்றும் நுழைவு மறுக்கப்படுதல் தொடர்பான அச்சுறுத்தல்கள் அதிகரித்து வருவதாக பல மாணவர்கள், ஊழியர்கள் வெளிப்படுத்திய நிலையில், இந்த அறிவிப்பு வழங்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

பல மாணவர்களும் ஆசிரியர்களும் பயணத்திற்காக முன்பாகவே கவனமாக இருக்க வேண்டும் என பல்கலைக்கழகத்தின் வேந்தர் டேனியல் ஜுட்ராஸ் குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்க எல்லையில் பயணிகள் மின் சாதனங்களை (லேப்டாப், கைபேசி) சோதனைக்கு உட்படுத்த அதிகாரிகள் உரிமை பெற்றுள்ளனர் என்பதை நினைவில் கொள்ள வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ஆராய்ச்சியாளர்கள் தங்கள் முக்கியமான மற்றும் ரகசியமான

C2 ▶




# டொரொண்டோவில் கத்தி குத்து தாக்குதல்

## இளைஞர் படுகாயம்

டொரொண்டோ நகர மத்திய பகுதியில் கடந்த சனிக்கிழமை இரவு நடைபெற்ற குத்து தாக்குதலில் 20 வயது இளைஞர் காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம் இரவு 10:50 மணியளவில் யோங் தெரு மற்றும் கிங் தெரு மேற்கு பகுதியில் இடம்பெற்றதாக டோரொண்டோ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காயமடைந்த இளைஞர் உள்ளூர் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இருப்பினும், அவரது காயங்கள் உயிருக்கு ஆபத்தானவை அல்ல என்று பின்னர் உறுதி செய்யப்பட்டது.

தாக்குதலில் ஈடுபட்ட நபர் குறித்து இதுவரை எந்தத் தகவலும் வெளியிடப்படவில்லை.

இருப்பினும், இந்த சம்பவம் தொடர்பான விசாரணை தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

தகவல் தெரிந்தவர்கள் உடனடியாக பொலிஸாரை (416-808-5200) தொடர்பு கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது.

---

அமெரிக்க...

தகவல்களை வெளிநாட்டிற்கு எடுத்துச் செல்லும் முன் அவை பாதுகாப்பாக உள்ளதா என்பதை உறுதி செய்ய வேண்டும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மின்கருவிகளின் கடவுச்சொற்களை (passwords) மாற்றி, பயணத்திற்குப் புறப்படும் முன் அவற்றை பாதுகாக்க ஆலோசிக்கப்பட வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க அதிகாரிகளுக்கு சாதனங்களை அணுக அனுமதிக்க மறுத்தால், நுழைவு மறுக்கப்படலாம் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, அண்மைய உள்நாட்டு பாதுகாப்பு நடவடிக்கைகள் காரணமாக அமெரிக்காவிற்கான பயணங்களை ரத்து செய்துள்ளதாகவும், அமெரிக்க பயணங்களுக்கு முன் முனைப்பாக பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள பலர் ஆலோசித்து வருவதாகவும் மெக்கில் McGill பல்கலைக்கழக பேராசிரியர் அராஷ் அபிசாதே தெரிவித்துள்ளார்.

---

கனடா மீது...
(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்வரும் ஏப்ரல் 2 ஆம் திகதி முதல் சாஃப்ட்வுட் மரத்தின் மீதான வரியை 27 சதவீதமாக உயர்த்த ட்ரம்ப் உறுதி கொண்டுள்ளார். ஆனால் இது 50 சதவீதமாக அதிகரிக்கவும் வாய்ப்புள்ளதாக கூறப்படுகிறது.

ட்ரம்பின் இந்த முடிவால் டாய்லெட் பேப்பர் மற்றும் பேப்பர் துண்டுகளை தயாரிக்க பயன்படும் NBSK என்ற மூலப்பொருளின் பற்றாக்குறை ஏற்படும்.

கடந்த ஆண்டு மட்டும் 2 மில்லியன் தொன் கனேடிய NBSK வை அமெரிக்கா இறக்குமதி செய்துள்ளது.

கொவிட் தொற்று காலகட்டத்தின் துவக்கத்தில் மக்கள் அவசர அவசரமாக பொருள்களை மொத்தமாக வாங்கிக் குவித்த அதே நிலை தற்போதும் ஏற்பட வாய்ப்புள்ளதாக கூறப்படுகின்றது.

கடந்த 30 ஆண்டுகளாக NBSK இறக்குமதிக்கு கனடாவையே அமெரிக்கா நம்பியுள்ளது. தற்போது கனடாவில் இருந்து டீஸ்ரூம ஏற்றுமதிக்கு வாய்ப்பில்லை என்றால், அமெரிக்க நிறுவனங்கள் பல நெருக்கடியை எதிர்கொள்ளும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.

இதனால், ட்ரம்பின் வரி 50 சதவீதத்தை தாண்டினால், பல அமெரிக்க நிறுவனங்கள் மூடப்படும் சூழல் உருவாகும் என்றே கூறப்படுகிறது.

நீண்ட காலமாக உற்பத்தியை அமெரிக்காவிற்கு கொண்டு வருவதற்கான ஒரு கருவியாகவே ட்ரம்ப் வரிகளை ஊக்குவித்து வருகிறார்.

இதனாலையே கனடாவின் சாஃப்ட்வுட் தங்களுக்கு தேவையில்லை என ட்ரம்ப் தொடர்ந்து கூறி வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

# கனேடிய தேர்தலில் நான்கு தமிழர்கள்



கனேடிய பொதுத் தேர்தலில் நான்கு தமிழ் பேசும் வேட்பாளர்கள் களமிறங்கவுள்ளனர்.


எதிர்வரும் ஏப்ரல் 28 ஆம் திகதி கனேடிய பொது தேர்தல் நடைபெறவுள்ளது.

அவர்களில் இருவர் லிபரல் கட்சி சார்பிலும் ஏனைய இருவர் கொன்சர்வேர்ட்டிவ் கட்சி சார்பிலும் போட்டியிடுகின்றனர்.

கடந்த லிபரல் அரசாங்கத்தில் அமைச்சராகப் பணியாற்றிய ஹரி ஆனந்தசங்கரி, ஸ்காபுறோ ரூஜ் பார்க் தொகுதியிலும் புதிய முகமாக தற்போதைய மார்க்கம் நகரசபையின் 7ஆம் வட்டார உறுப்பினர் ஜுவொனிற்றா நாதன் மார்க்கம் பிக்கரிங் – புரூக்லின் தேர்தல் தொகுதியிலும் களமிறங்கவுள்ளனர்.

கொன்சர்வேர்ட்டிவ் கட்சி சார்பில் போட்டியிடும் லையனல் லோகநாதன் மார்க்கம் தோர்ண்ஹில் தொகுதியிலும் மற்றும் முன்னாள் பொலிஸ் அதிகாரியான நிரான் ஜெயநேசன் மார்க்கம்-யுனியன்வில் தொகுதியிலும் களமிறங்கவுள்ளனர்.

# டொரொண்டோவில் துப்பாக்கி சூடு: பொலிஸார் தீவிர விசாரணை




டொரொண்டோ நகரில் பிரிச் மவுண்ட் வீதி டீசைஉாஅழரவெ சுழயன மற்றும் ஷெப்பர்ட் அவன்யூ Shep-pard Avenue East பகுதியில் கடந்த சனிக்கிழமை அதிகாலை துப்பாக்கி சூடு நடந்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சமூக வலைதளங்களில் பகிரப்பட்ட ஒரு பதிவில், இந்த சம்பவம் அதிகாலை 2 மணிக்கு முன்னதாக நடைபெற்றதாகவும், அந்த பகுதியில் ஒரு துப்பாக்கிச் சூடு நடந்தது உறுதி செய்யப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவ இடத்தில் மேற்கொண்ட விசாரணையின் போது, அதிகாரிகள் ஒரு துப்பாக்கி தோட்டாகத்தை (shell casing) கண்டுபிடித்துள்ளனர்.

உயிரிழப்புகள் அல்லது காயங்கள் ஏற்பட்டுள்ளனவா என்பது குறித்து தகவல் இல்லை. சந்தேகநபர் குறித்தும் எந்த விவரமும் வெளிவரவில்லை.

தகவல் தெரிந்தவர்கள் பொலிஸாரை (416-808-2222) தொடர்பு கொள்ளலாம் அல்லது அடையாளம் தெரியாமல் Crime Stoppers (416-222-TIPS) மூலம் தகவல் வழங்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# ஒண்டாரியோ மாகாணத்திற்கு லாட்டோ மேக்ஸ் ஜாக்பாட் வெற்றி

இந்த ஆண்டில் ஒண்டாரியோ மாகாணத்திற்கு நான்காவது முறையாக தொடர்ச்சியாக லாட்டோ மேக்ஸ் ஜாக்பாட் வெற்றி கிடைக்கப் பெற்றுள்ளது.

இந்த முறை 65 மில்லியன் டொலர் பரிசு நியூமார்கெட்டில் விற்பனை செய்யப்பட்ட ஒரு டிக்கெட்டிற்கு போயுள்ளது என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஒண்டாரியோ லாட்டரி ரூ கேமிங் கமிஷன் (முடுடு) கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற சீட்டிலுப்பில் இந்த வெற்றி டிக்கெட் விற்பனை செய்யப்பட்டதாக உறுதி செய்துள்ளது.

அந்த பகுதியைச் சேர்ந்தவர்களுக்கு தங்களது டிக்கெட்டுகளை உடனடியாக சரிபார்க்குமாறு அறிவுறுத்




தப்பட்டுள்ளது.

இது 2024ம் ஆண்டில் ஒண்டாரியோவில் விற்பனை செய்யப்பட்ட நான்காவது மிகப்பெரிய லாட்டோ மேக்ஸ் வெற்றி கிடைக்கப் பெற்ற லொத்தர் சீட்டு இதுவாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

இதற்கு முன்னதாக ஜனவரி 21: எடோபிக்கோவில் 60 மில்லியன் டொலர் ஜனவரி 31: வில்லோடேலில் 25 மில்லியன் டொலர் பெப்ரவரி 21: ஒஷாவாவில் 40 மில்லியன் டொலர் வெற்றி பெற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஒண்டாரியோவில் சாதனை முறிக்கும் லாட்டோ மேக்ஸ் வெற்றி 2024 ஆம் ஆண்டில் மட்டும், 11 மொத்த துயஉமிழவ வெற்றி கிடைக்கப்பெற்றுள்ளதாக அதிகாரிகள் மேலும் தெரிவித்துள்ளனர்:

2009 முதல் இன்று வரை, ஒண்டாரியோவில் லாட்டோ மேக்ஸ் மூலம் 9 பில்லியன் டொலர்களுக்கும் அதிகமான பரிசுகள் வெல்லப்பட்டுள்ளன.

இது 115 ஜக்பொட் துயஉமிழவ வெற்றிகளையும், 937 மெக்ஸ்மில்லியன்ஸ் Maxmillions பரிசுகளையும் உள்ளடக்கியது என்பது குறிப்பிடத்தக்கது.